**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மன்னார்குடி**

முன்னிலை: திரு.ஜெ.தமிழ்முருகன்,பி.ஏ.,பி.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி

2026 ஆம் ஆண்டு மே மாதம் 07 ம் நாள் வியாழக்கிழமை

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.67/2025**

## CASE SUMMARY

| Sl.No. | Description | Remarks | |
|---|---|---|---|
| 1 | The period of remand of the accused | Remanded on : 30.04.2024<br>Released on : 04.01.2025 | |
| 2 | The date of filing of complaint/final report in the Court | 14.03.2025 | |
| 3 | The date of committal of the case to the Court of Sessions | Not Applicable | |
| 4 | The date of Questioning of accused U/S 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be | 21.01.2026 | |
| 5 | Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 317 of the Code . | NIL | |
| 6 | Date of examination in Chief and Cross examination of a witness | Chief<br>P.W.1 – 09.04.2026 | Cross<br>09.04.2026 |
| | | P.W.2 – 09.04.2026 | 09.04.2026 |
| | | P.W.3 – 09.04.2026 | 09.04.2026 |
| | | P.W.4 - 16.04.2026 | 16.04.2026 |
| | | P.W.5 - 28.04.2026 | 28.04.2026 |
| 7 | Date of examination of the accused under section 351(1)(b) BNSS of the Court | 28.04.2026 | |
| 8 | Details of Abscondence of an accused and his appearance /production, as the case may be | Not Applicable | |



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 19:56:06 +0530

| | | |
|---|---|---|
| 9 | Grant of stay by superior Courts and the results thereof | Not Applicable |

**//எதிராக//**

| | | |
|---|---|---|
| **அரசுக்காக:**<br>**காவல் உதவி ஆய்வாளர்,**<br>மன்னார்குடி நகர காவல் நிலையம்,<br>குற்ற எண்.285/2024<br>ச/பி 452,294(b),353,506(1) IPC ,<br>4 of TNPWH Act | | .............குற்ற முறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| வடிவேல்,வயது39/2024,<br>த/பெ. தங்கரசு<br>எண்.18-A,குன்னூஜி ராஜம்பாளையம் தெரு,<br>மன்னார்குடி. | | ……எதிரி |

இவ்வழக்கானது கடந்த 04.04.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு, இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்து, இன்று 28.04.2026 என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்ற முறையீட்டாளர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை.2 அவர்களும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.N.S.நடேஷ்,B.A.,LL.B(Hons), அவர்கள் முன்னிலையாகி, இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இன்று (07.05.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்........

**//தீர்ப்புரை//**

**<u>1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்.</u>**

இவ்வழக்கின் வாதியான செந்தில்சுசிலா வயது 47/2024 க/பெ.கதிரவன் என்பவர் மன்னார்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்றத்தில் பெஞ்சு கிளர்க்காக வேலை



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 19:56:13 +0530

பார்த்து வருகிறார் என்றும், மேற்படி நீதிமன்றத்தில் CC.No-71/2024 என்ற வழக்கில் NBW நிலுவையில் இருக்கும் எதிரி வடிவேல் த/பெ தங்கராசு விழல்காரத்தெரு மன்னார்குடி என்பவர் 12.04.2024 ம் தேதி நீதிமன்ற வளாகத்தில் அத்துமீறி நுழைந்து நீதிமன்ற சாட்சி கூண்டில் ஏறி நின்று தகாத வார்த்தைகளால் திட்டி சத்தம் போட்டும் சேம்பர் நோக்கி ஓடியவரை அலுவலக ஊழியர்கள் சேர்ந்த வெளியே அனுப்பியுள்ளார்கள் என்றும் இந்நிலையில் 22.04.2024 ம் தேதி மாலை 16.30 மணியளவில் மன்னார்குடி குற்றவியல் நீதிமன்ற எண்-1 திறந்த நீதிமன்றத்தில் வாதி செந்தில்சுசிலா பணியில் இருந்தபோது எதிரி வடிவேல் என்பவர் நீதிமன்றத்தில் உள்ளே நுழைந்து அங்கு அலுவலக உதவியாளர்களை அசிங்கமாக திட்டியும் வாதியை பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டியும் பணியை செய்யவிடாமல் தொந்தரவு செய்தும் மேலும் வாதியை பார்த்து பெண் அரசு ஊழியர் என்று பாராமல் திறந்த நீதிமன்றத்தில் பலபேர் பார்க்க உன்னை பார்த்தால் முத்தம் கொடுக்கனும் போல் இருக்கு என்று அருவறுக்கதக்க வகையில் பேசியும் அங்கிருந்த நீதிமன்ற ஊழியர்கள் அவரை வெளியே செல்லுமாறு சொன்னபோது வாதியையும் அங்கிருந்த மற்ற நீதிமன்ற ஊழியர்களையும் பார்த்து என்னிடம் வைத்துக்கொண்டால் கொன்றுவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தும் குற்ற செயல் புரிந்துள்ளார், எனவே எதிரியின் குற்ற செயலானது சட்டப்பிரிவுகள் 452, 294(b),353,506(1)IPC & 4 of TNPWH Act-ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக மன்னார்குடி நகர காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. நகல் வழங்கல்**

எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரிக்கு இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் நகல் இலவசமாக வழங்கப்பட்டது.

**3. குற்றச்சாட்டு வனைதல்**

எதிரிடம் குற்றம் பற்றி வினவ போதிய முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது இதச பிரிவுகள் 452, 294(b),353,506(1)IPC & 4 of TNPWH Act-ன் ன் கீழும், BNSS பிரிவு 263-ன் படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி வினவியபோது எதிரின் குற்றச்சாட்டை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.5** வரையான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், சான்றாவணங்கள் **அ.சாஆ.1 முதல் அ.சாஆ.4** வரையும், சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 19:56:21 +0530

**4.அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து புலப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

**அசா.**1 செந்தில் சுசிலா தனது சாட்சியத்தில் தான் நன்னிலம் நீதிமன்றத்தில் துணை நாசராக பணி செய்து வருகிறேன் என்றும், இவ்வழக்கின் எதிரியான வடிவேல் என்பவரை தனக்கு தெரியும் என்றும், கடந்த 22.04.2024 ம் தேதியன்று மாலை 04.30 மணியளவில் தான் மன்னார்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1ல் பெஞ்ச் கிளார்க்காக திறந்தவெளி நீதிமன்றத்தில் பணியாற்றி கொண்டிருந்தபோது எதிரி வடிவேல் நீதிமன்றத்திற்குள் வந்து அலுவலக உதவியாளர் விஜயலெட்சுமி மற்றும் நகல் எடுப்பவர் உ. ரூத்மேகி ஆகியோரிடமும் காசு கொடு காசு கொடு என்று கேட்டார் என்றும், தான் அவரிடம் காசுயெல்லாம் வெளியே போங்க என்று கூறினேன் என்றும், அப்போது எதிரி தன்னை பார்த்து உன்னை பார்த்தால் முத்தம் கொடுக்கனும்போல் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு தனது அருகில் வந்தார் என்றும், மேலும், அசிங்கமாக திட்டினார் என்றும், இதுபோன்று அடிக்கடி வார இறுதி நாட்களில் நீதிமன்ற ஊழியர்கள் turn duty செய்யும் போது இதுபோன்று தகராறு செய்திருக்கிறார் என்றும், தான் உடனடியாக போலீசாருக்கு போன் செய்ய போகிறேன் என்று எனது தொலைபேசியை எடுத்தவுடன் இங்கிருந்து சென்றுவிட்டார் என்றும், சம்பவம் தொடர்பாக அன்றைய தினமே மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் மாண்பமை நீதித்துறை நடுவர் எண்.1(முகூபொ) மூலம் உரிய வழி மூலமாக புகார் மனு அளித்தேன் என்றும், நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் தான் கொடுத்ததுதான் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியமளித்துள்ளார்.

**அசா. 2** விஜயலட்சுமி தனது சாட்சியத்தில் நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளராக பணி செய்து வருகிறேன் என்றும், இவ்வழக்கின் எதிரியான வடிவேல் என்பவரை தனக்கு தெரியும் என்றும், கடந்த 22.04.2024 ம் தேதியன்று மாலை 04.30 மணியளவில் தான் மன்னார்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1ல் திறந்தவெளி நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளராக பணியாற்றி கொண்டிருந்தபோது அசா.1 பெஞ்ச் கிளார்க்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 19:56:28 +0530

பணியிடத்தில் அமர்ந்திருந்தார் என்றும், அப்போது எதிரி வடிவேல் நீதிமன்ற அலுவலகத்திற்கு வந்து ஊழியர்களிடம் பைசா கேட்டுக்கொண்டிருந்தார் என்றும், அப்போது நீதிமன்றத்திற்குள் வந்து தன்னிடமும் மற்றும் நகல் எடுப்பவர் உ.ரூத்மேகி ஆகியோரிடமும் காசு கொடு காசு கொடு என்று கேட்டார் என்றும், தான் அவரிடம் காசுயெல்லாம் வெளியே போங்க என்று கூறினேன் என்றும், அப்போது எதிரி நீதிமன்றத்திற்குள் வந்து அசா.1 ஐ பார்த்து உன்னை பார்த்தால் முத்தம் கொடுக்கனும்போல் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு அசா.1ன் அருகில் வந்தார் என்றும், மேலும், அசிங்கமாக திட்டினார் என்றும், இதுபோன்று அடிக்கடி வார இறுதி நாட்களில் நீதிமன்ற ஊழியர்கள் turn duty செய்யும் போது இதுபோன்று தகராறு செய்திருக்கிறார் என்றும், அசா.1 உடனடியாக போலீசாருக்கு போன் செய்ய போகிறேன் என்று அசா.1 தொலைபேசியை எடுத்தவுடன் இங்கிருந்து சென்றுவிட்டார் என்றும், சம்பவம் தொடர்பாக அன்றைய தினமே மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் மாண்பமை நீதித்துறை நடுவர் எண்.1(முகூபொ) மூலம் உரிய வழி மூலமாக புகார் மனு அளித்தார் என்றும், போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அசா.3** ரூத்மேகி தனது சாட்சியத்தில் தான் நீதிமன்றத்தில் நகல் எடுப்பவராக பணி செய்து வருகிறேன் என்றும், இவ்வழக்கின் எதிரியான வடிவேல் என்பவரை தனக்கு தெரியும் என்றும், கடந்த 22.04.2024 ம் தேதியன்று மாலை 04.30 மணியளவில் தான் மன்னார்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ல் திறந்தவெளி நீதிமன்றத்தில் பதிவேடுகளை எழுதி கொண்டிருந்தபோது அசா.1 பெஞ்ச் கிளார்க் பணியிடத்தில் அமர்ந்திருந்தார் என்றும், அப்போது எதிரி வடிவேல் நீதிமன்ற அலுவலகத்திற்கு வந்து ஊழியர்களிடம் பைசா கேட்டுக்கொண்டிருந்தார் என்றும், அப்போது நீதிமன்றத்திற்குள் வந்து தன்னிடமும் மற்றும் அலுவலக உதவியாளர் விஜயலெட்சுமி ஆகியோரிடமும் காசு கொடு காசு கொடு என்று கேட்டார் என்றும், தான் அவரிடம் காசுயெல்லாம் வெளியே போங்க என்று கூறினேன் என்றும், அப்போது எதிரி நீதிமன்றத்திற்குள் வந்து அசா.1 ஐ பார்த்து உன்னை பார்த்தால் முத்தம் கொடுக்கனும்போல் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு அசா.1ன்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 19:56:35 +0530

அருகில் வந்தார் என்றும், மேலும், அசிங்கமாக திட்டினார் என்றும், மிரட்டினார் என்றும், இதுபோன்று அடிக்கடி வார இறுதிநாட்களில் நீதிமன்ற ஊழியர்கள் turn duty செய்யும் போது இதுபோன்று தகராறு செய்திருக்கிறார் என்றும், அசா.1 உடனடியாக போலீசாருக்கு போன் செய்ய போகிறேன் என்று அசா.1 தொலைபேசியை எடுத்தவுடன் இங்கிருந்து சென்றுவிட்டார் என்றும், சம்பவம் தொடர்பாக அன்றைய தினமே மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் மாண்பமை நீதித்துறை நடுவர் எண்.1(முகூபொ) மூலம் உரிய வழி மூலமாக புகார் மனு அளித்தார் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியமளித்துள்ளார்.

**அசா.4** மனோசித்ரா தனது சாட்சியத்தில் தான் தற்போது திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 25.04.2024 ம் தேதியன்று மதியம் 01.30 மணியளவில் தான் நீதிமன்ற அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது மன்னார்குடி நகர போலீசார் 22.04.2024 ம் தேதியன்று இவ்வழக்கின் எதிரியான வடிவேல் என்பவர் நீதிமன்ற ஊழியர்களிடம் தவறாக பேசி தகராறு செய்தது தொடர்பாக சம்பவ இடமான மன்னார்குடி நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் என் முன்னிலையிலும், இளநிலை உதவியாளர் செல்வமணி என்பவர் முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள்கள் என்றும் அதில் சாட்சியாக தானும், இளநிலை உதவியாளர் செல்வமணி என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும், நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும் மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அசா.5** முருகன்- காவல் உதவி ஆய்வாளர் தான் தற்போது வலங்கைமான் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன் என்றும், கடந்த 25.04.2024 ம் தேதியன்று மன்னார்குடி நகர காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் சிவசங்கரன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது மன்னார்குடி வட்ட காவல்



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 19:56:42 +0530

அலுவலகத்தில் இருந்து வரப்பெற்று 23.04.2024ம் தேதியிட்ட சி.நெ.41/circle/24 dated 24.04.2024 JM No.1 court D.No.282/2024 dated 23.04.2024 ன் படி தபாலை பெற்று பார்வையிட்டு மன்னார்குடி நகர காவல் நிலைய குற்ற எண்.285/2024 ச/பி. 452, 294(பி), 353, 506(1) இதச மற்றும் 4 of TNPHW Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணைக்காக தனது பார்வைக்கு வைக்கப்பட்டது என்றும், மேற்படி முதல் தகவல் அறிக்கை அசா.ஆ- 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட தான் அன்றையதினம் 13.30 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் மனோசித்ரா மற்றும் செல்வமணி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றும், மேற்படி பார்வை மகசர் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மாதிரி வரைபடம் அசா.ஆ-4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் பட்டியல் சாட்சி 1 முதல் 5 வரையானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சிறப்பு உதவி ஆய்வாளர் சிவசங்கரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், சாட்சிகளை விசாரித்த வகையில் சம்பவம் உண்மை என தெரியவரவே எதிரியை 30.04.2024ம் தேதியன்று பந்தலடி உழவர் சந்தை அருகே நின்று கொண்டிருந்தவரை மன்னார்குடி நகர காவல் நிலைய குற்ற எண்.301/2024 வழக்கில் 13.00 மணிக்கு காவல் ஆய்வாளரால் குற்றக்காரணம் கூறி கைது செய்தவரை மேற்படி இந்த வழக்கிலும் சம்பந்தப்பட்டவர் என்பது தெரிய வந்தநிலையில் 14.00 மணிக்கு என்னால் சம்பிரதாய கைது செய்து நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தினேன் என்றும், இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது ச/பி. 452, 294(பி), 353, 506(1) இதச மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் குற்றம் என குற்ற இறுதியறிக்கை 14.03.2025ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அவரது விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானதுச/பி. 452, 294(பி), 353, 506(1) IPC and 4 of TNPHW Act ன் படியும், கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்ற இறுதியறிக்கை 30.11.2015 ம் தேதி தாக்கல் செய்துள்ளளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.05.07 19:56:49 +0530

**5. எதிரிடம் பிரிவு 351(1)(b) BNSS ன் கீழ் வினவுதல்**

மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து இவ்வழக்கின் எதிரிக்கு பாதகமாக தோன்றியவற்றை தொகுத்து பிரிவு 351(1)(b) BNSS ன் கீழ் வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என்றும் பொய் வழக்கு என்றும் கூறி மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரையும் விசாரிக்கவோ, ஆவணங்கள் எதுவும் குறியிடப்படவோ இல்லை.

**6. தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம்**

இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை ஆகும்.

**7.** அரசுத்தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என வாதிட்டார்.

**8.** எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரி மீது புகார்தாரரால் பொய்யான புகார் கொடுக்கப்பட்டு வழக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது என வாதிட்டார்.

**9. தீர்வு :**

இவ்வழக்கின் எதிரி மீது இதச பிரிவுகள் 452, 294(b),353,506(1)IPC & 4 of TNPWH ACT ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. மேலும், அரசுத்தரப்பில் அசா 1 முதல் 5 வரையான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், பட்டியல் சாட்சிகள் 4,6,7 ஆகிய சாட்சிகள் அரசுத்தரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் விசாரணை அதிகாரியான பட்டியல் சாட்சி 7 காவல் உதவி ஆய்வாளர் திரு.முருகன் அனுமதிக்கப்பட்டு அசா 5 ஆக விசாரணை செய்யப்பட்டு அசாஆ. 2 முதல் அசாஆ. 4 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் புகார்தாரர் அசா 1 ஆகவும், அ.சா.2 ,3 கண்ணுற்ற சாட்சியாகவும் அ.சா.4-பார்வை மகஜர் சாட்சியாகவும்,அ.சா.5-புலன் விசாரணை அதிகாரிகாவும் விசாரிக்கப்பட்டுள்ளார் .

10. **1** வது **குற்றச்சாட்டுக்கான தீர்வு :**



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.05.07 19:56:56 +0530

இவ்வழக்கின் வாதி செந்தில்சுசீலா க/பெ.கதிரவன் என்பவர் மன்னார்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 ல் பெஞ்ச் கிளர்க்காக வேலை பார்த்து வரும் நிலையில் மேற்படி நீதிமன்றத்தில் C.C.No.71/2024 வழக்கில் NBW நிலுவையில் இருக்கும் எதிரி வடிவேல் கடந்த 12.04.2024 ஆம் தேதி நீதிமன்ற வளாகத்தில் அத்து மீறி நுழைந்த செயலானது இதச பிரிவு 452 ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என்ற குற்றசாட்டை பரிசீலினை செய்தும் பொழுது,

அரசு தரப்பு பதிவு ஆவணங்களின் படி குற்ற நிகழ்வு நாள் 22.04.2024 ம் தேதி 16.30 மணி. காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.04.2024 ம் தேதி 12.30 மணி. குற்ற நிகழ்வு இடம் - மன்னார்குடி நீதிதுறை நடுவர் எண்.1 நீதிமன்ற வளாகம். 0.5 கி.மீ மேற்கு. முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் பெறப்பட்ட நாள் 30.04.2024 ம் தேதி 06.15 மணி. போலீசார் சம்பவ இடத்தை 25.04.2024 ம் தேதி 13.30 மணிக்கு பார்வையிட்டதாக தெரிய வருகிறது.

அசா.4 மனோசித்ரா கடந்த 25.04.2024 ம் தேதி மதியம் 01.30 மணியளவில் நீதிமன்ற அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டு இருந்த போது மன்னார்குடி நகர போலீசார் 22.04.2024 ம் தேதியன்று இவ்வழக்கின் எதிரியான வடிவேல் என்பவர் நீதிமன்ற ஊழியர்களிடம் தவறாக பேசி தகராறு செய்தது தொடர்பாக சம்பவ இடமான மன்னார்குடி நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றத்தில் தன் முன்னிலையிலும், இளநிலை உதவியாளர் செல்வமணி என்பவர் முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

**அசா.**1 செந்தில் சுசிலா தனது சாட்சியத்தில் கடந்த 22.04.2024 ம் தேதியன்று மாலை 04.30 மணியளவில் தான் மன்னார்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ல் பெஞ்ச் கிளார்க்காக திறந்தவெளி நீதிமன்றத்தில் பணியாற்றி கொண்டிருந்தபோது எதிரி வடிவேல் நீதிமன்றத்திற்குள் வந்து அலுவலக உதவியாளர் விஜயலெட்சுமி மற்றும் நகல் எடுப்பவர் உ. ரூத்மேகி ஆகியோரிடமும் காசு கொடு காசு கொடு என்று கேட்டார் என்றும், தான் அவரிடம் காசுயெல்லாம் வெளியே போங்க என்று கூறினேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

அசா.1 யை அனுசரித்து அசா.2 விஜயலட்சுமி மற்றும் அசா.3 ரூத்மேகி ஆகியோர்கள் கடந்த 22.04.2024 ம் தேதி மாலை 16.30 மணிக்கு நீதிமன்றத்திற்குள் அத்து மீது நுழைந்து



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 19:57:03 +0530

காசு கொடு என்று கோட்டதாகவும் அதற்கு அசா.1 மூதல் அசா.3 வரையான நபர்கள் காசு இல்லை வெளியே போங்கள் என்று சொன்னதாகவும் என்று சாட்சியமளித்துள்ளார். அசா.1 முதல் அசா.3 வரையான சாட்சியங்களில் இருந்து 22.04.2024 ம் தேதி 16.30 மணிக்கு எதிரிக்கு நீதிமன்றத்தில் வழக்கு இருந்தாகவோ அல்லது 22.04.2024 ம் தேதி எதிரி நீதிமன்றத்தில் நுழைய வேண்டிய அவசியம் குறித்து எதிரியின் தரப்பால் எவ்வித விளக்கமும் சாட்சிகளிடம் கேள்வியும் முன் வைக்கப்படவில்லை. எனவே அசா.1 முதல் அசா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்கள் இயற்கையாகவும் நம்பும்படியாகவும் உள்ளது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.மேலும் கடந்த 22.04.2024 தேதி 16.30 மணிக்கு எதிரி அசா.1 செந்தில் சுசீலா என்பர் நீதிமன்ற பணியில் இருந்த போது எதிரி நீதிமன்றத்திற்குள் அத்து மீது நுழைந்து காசு கொடு என்று நச்சரித்துள்ளார் என்ற அரசு தரப்பு வழக்கானது நிரூபணம் செய்யப்பட்டடுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

2-வது **<u>குற்றச்சாட்டுக்கான தீர்வு</u>**

மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரி நீதிமன்றத்தில் உள்ள நீதிமன்ற சாட்சி கூண்டில் ஏறி நின்று வாதி செந்தில் சுசீலாவையும்,அலுவலக உதவியாளர்களையும் பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டியதாக இதச பிரிவு 294(பி)ன் கீழான குற்றச்சாட்டை பரிசீனை செய்கையில்

**அசா.**1 செந்தில் சுசிலா தனது சாட்சியத்தில் கடந்த 22.04.2024 ம் தேதியன்று மாலை 04.30 மணியளவில் தான் மன்னார்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ல் பெஞ்ச் கிளார்க்காக திறந்தவெளி நீதிமன்றத்தில் பணியாற்றி கொண்டிருந்தபோது எதிரி வடிவேல் நீதிமன்றத்திற்குள் வந்து அலுவலக உதவியாளர் விஜயலெட்சுமி மற்றும் நகல் எடுப்பவர் உ. ரூத்மேகி ஆகியோரிடமும் காசு கொடு காசு கொடு என்று கேட்டார் என்றும், தான் அவரிடம் காசுயெல்லாம் இல்லை வெளியே போங்க என்று கூறினேன் என்றும், அப்போது எதிரி



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.05.07 19:57:11 +0530

தன்னை பார்த்து உன்னை பார்த்தால் முத்தம் கொடுக்கனும்போல் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு தனது அருகில் வந்தார் என்றும், மேலும், அசிங்கமாக திட்டினார் என்றும், இதுபோன்று அடிக்கடி வார இறுதி நாட்களில் நீதிமன்ற ஊழியர்கள் turn duty செய்யும் போது இதுபோன்று தகராறு செய்திருக்கிறார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

அசா.1 யை அனுசரித்து அசா.2 விஜயலட்சுமி மற்றும் அசா.3 ரூத்மேகி ஆகியோர்கள் கடந்த 22.04.2024 ம் தேதி மாலை 16.30 மணிக்கு நீதிமன்றத்திற்குள் அத்து மீது நுழைந்து காசு கொடு என்று கோட்டதாகவும் அதற்கு அசா.1 மூதல் அசா.3 வரையான நபர்கள் காசு இல்லை வெளியே போங்கள் என்று சொன்னதாகவும்,அதற்கு எதிரி அசிங்கமாக திட்டியாதகவும் இது போன்று வார இறுதி நாட்களில் அடிக்கடி நீதிமன்ற ஊழியர்கள் turn duty செய்யும் போது தகராறு செய்து இருக்கிறார் என்று சாட்சியமளித்துள்ளார். அசா.1 முதல் அசா.3 வரையான சாட்சியங்களில் இருந்து 22.04.2024 ம் தேதி 16.30 மணிக்கு எதிரி நீதிமன்றத்திற்குள் நுழைந்து அசா.1 யை என்ன அசிங்கமாக வார்த்தையால் திட்டினார் என்பது குறித்தும்,அசா.2 மற்றும் அசா.3 ஆகியோர்கள் மேற்படி எதிரி பேசியாதாக செல்லப்படும் அசிங்மான வார்த்தையிலிருந்து தங்களுக்கு அவமானமாகவோ அல்லது அசிங்கமாகவோ இருந்ததாக குறிப்பிட்டு சாட்சிமளிக்கவில்லை.எனவே எதிரிக்கு எதிராக நீதிமன்றத்தால் வனையப்பட்ட இதச பிரிவு 294(பி) குற்றசாட்டு நிரூபனம் செய்யப்படவில்லை என்று நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

3-வது **<u>குற்றச்சாட்டுக்கான தீர்வு</u>**

மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரி நீதிமன்றத்தில் உள்ளே சென்று வாதியை பணி செய்ய விடாமல் தொந்தரவு செய்ததாக இதச பிரிவு 353 ன் கீழான குற்றசாட்டை பரிசீலனை செய்கையில்

**அசா.**1 செந்தில் சுசிலா தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் எதிரியான வடிவேல் என்பவரை தனக்கு தெரியும் என்றும், கடந்த 22.04.2024 ம் தேதியன்று மாலை 04.30 மணியளவில் தான் மன்னார்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ல் பெஞ்ச்



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 19:57:23 +0530

கிளார்க்காக திறந்தவெளி நீதிமன்றத்தில் பணியாற்றி கொண்டிருந்தபோது எதிரி வடிவேல் நீதிமன்றத்திற்குள் வந்து அலுவலக உதவியாளர் விஜயலெட்சுமி மற்றும் நகல் எடுப்பவர் உ. ரூத்மேகி ஆகியோரிடமும் காசு கொடு காசு கொடு என்று கேட்டார் என்றும், தான் அவரிடம் காசுயெல்லாம் வெளியே போங்க என்று கூறினேன் என்றும், அப்போது எதிரி தன்னை பார்த்து உன்னை பார்த்தால் முத்தம் கொடுக்கனும்போல் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு தனது அருகில் வந்தார் என்றும், மேலும், அசிங்கமாக திட்டினார் என்றும், இதுபோன்று அடிக்கடி வார இறுதி நாட்களில் நீதிமன்ற ஊழியர்கள் turn duty செய்யும் போது இதுபோன்று தகராறு செய்திருக்கிறார் என்றும், தான் உடனடியாக போலீசாருக்கு போன் செய்ய போகிறேன் என்று எனது தொலைபேசியை எடுத்தவுடன் இங்கிருந்து சென்றுவிட்டார் என்றும், சம்பவம் தொடர்பாக அன்றைய தினமே மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் மாண்பமை நீதித்துறை நடுவர் எண்.1(முகூபொ) மூலம் உரிய வழி மூலமாக புகார் மனு அளித்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

அசா.1 செந்தில் சுசீலா தனது குறுக்கு விசாரணையில் அன்றேய நாளிற்கான அலுவல் பணி முடிந்து விட்டமையால் கூட்டம் எதும் இல்லை.சம்பவம் நாள் அன்று சம்பவத்திற்கு பிறகும் தொடர்ந்து அலுவல் பணியை மேற்கொண்டு வந்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

அரசு ஊழியரை அரசு அலுவல் புரியவிடாமல் தடுத்து சம்மந்தமான குற்றச்சாட்டை பொருத்து பின்வரும் உட்கூறுகளை நிறைவு செய்தால் மட்டுமே தண்டிக்கபட முடியும் என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் **Mahendra Kumar Sonker v. The State of Madhya Pradesh** என்ற வழக்கில் சொல்லியுள்ளது. மேற்படி , வழக்கில் சொல்லப்பட்டுள்ள உட்கூறுகள் பின்வருமாறு,

- **Use of Criminal Force:** Defined under Section 350 of the IPC, it requires intentional use of force without the person's consent, aiming to commit an offense or knowing it is likely to cause injury, fear, or annoyance.



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.05.07 19:57:32 +0530

•**Intent to Obstruct:** The act must be with the intention to prevent or deter the public servant from discharging their duty.

இந்த வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் எதிரி தாங்கள் அரசு பணியை செய்யும் போது எதிரி குற்ற எண்ணத்துடன் அந்த பணியை செய்ய விடாமல் தடுத்தற்கு எவ்வித காரணமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்றும் அதனால் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் எதிரி தரப்பில் வாதிடப்பட்டது.

அசா.1 யை அனுசரித்து அசா.2 விஜயலட்சுமி மற்றும் அசா.3 ரூத்மேகி ஆகியோர்கள் கடந்த 22.04.2024 ம் தேதி மாலை 16.30 மணிக்கு நீதிமன்றத்திற்குள் அத்து மீது நுழைந்து காசு கொடு என்று கோட்டதாகவும் அதற்கு அசா.1 மூதல் அசா.3 வரையான நபர்கள் காசு இல்லை வெளியே போங்கள் என்று சொன்னதாகவும்,அதற்கு எதிரி அசிங்கமாக திட்டியாதகவும் இது போன்று வார இறுதி நாட்களில் அடிக்கடி நீதிமன்ற ஊழியர்கள் turn duty செய்யும் போது தகராறு செய்து இருக்கிறார் என்று சாட்சியமளித்துள்ளார். அசா.1 முதல் அசா.3 வரையான சாட்சியங்களில் இருந்து 22.04.2024 ம் தேதி 16.30 மணிக்கு எதிரி நீதிமன்றத்திற்குள் நுழைந்து அசா.1 ன் பணியை செய்யவிடமால் தடுத்ததாக சாட்சியமளிக்கவில்லை. எனவே எதிரிக்கு எதிராக நீதிமன்றத்தால் வனையப்பட்ட இதச பிரிவு 353 ன் கீழான குற்றசாட்டு நிரூபனம் செய்யப்படவில்லை என்று நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

4-வது <u>**குற்றச்சாட்டுக்கான தீர்வு**</u>

மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரி நீதிமன்றத்தில் உள்ளே சென்றபோது நீதிமன்ற ஊழியர்கள் எதிரியை பார்த்து வெளியே செல்லுமாறு சொன்னதால் வாதியையும்,அங்கிருந்த மற்ற நீதிமன்ற ஊழியர்களையும் பார்த்து என்னிடம் வைத்துக்கொண்டால் கொன்று விடுவேன் என்று கொலைமிரட்டல் விடுத்ததாக இதச பிரிவு 506(1)ன் கீழான குற்றசாட்டை பரிசீலனை செய்கையில்

**அசா.**1 செந்தில் சுசிலா தனது சாட்சியத்தில் கடந்த 22.04.2024 ம் தேதியன்று மாலை 04.30 மணியளவில் தான் மன்னார்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1ல் பெஞ்ச்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 19:57:40 +0530

கிளார்க்காக திறந்தவெளி நீதிமன்றத்தில் பணியாற்றி கொண்டிருந்தபோது எதிரி வடிவேல் நீதிமன்றத்திற்குள் வந்து அலுவலக உதவியாளர் விஜயலெட்சுமி மற்றும் நகல் எடுப்பவர் உ. ரூத்மேகி ஆகியோரிடமும் காசு கொடு காசு கொடு என்று கேட்டார் என்றும், தான் அவரிடம் காசுயெல்லாம் இல்லை வெளியே போங்க என்று கூறினேன் என்றும், அப்போது எதிரி தன்னை பார்த்து உன்னை பார்த்தால் முத்தம் கொடுக்கனும்போல் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு தனது அருகில் வந்தார் என்றும், மேலும், அசிங்கமாக திட்டினார் என்றும், இதுபோன்று அடிக்கடி வார இறுதி நாட்களில் நீதிமன்ற ஊழியர்கள் turn duty செய்யும் போது இதுபோன்று தகராறு செய்திருக்கிறார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

அசா.1 யை அனுசரித்து அசா.2 விஜயலட்சுமி மற்றும் அசா.3 ரூத்மேகி ஆகியோர்கள் கடந்த 22.04.2024 ம் தேதி மாலை 16.30 மணிக்கு நீதிமன்றத்திற்குள் அத்து மீது நுழைந்து காசு கொடு என்று கோட்டதாகவும் அதற்கு அசா.1 மூதல் அசா.3 வரையான நபர்கள் காசு இல்லை வெளியே போங்கள் என்று சொன்னதாகவும்,அதற்கு எதிரி அசிங்கமாக திட்டியாதகவும் இது போன்று வார இறுதி நாட்களில் அடிக்கடி நீதிமன்ற ஊழியர்கள் turn duty செய்யும் போது தகராறு செய்து இருக்கிறார் என்று சாட்சியமளித்துள்ளார். அசா.1 முதல் அசா.3 வரையான சாட்சியங்களில் இருந்து 22.04.2024 ம் தேதி 16.30 மணிக்கு எதிரி நீதிமன்றத்திற்குள் நுழைந்து அசா.1,அசா.2 மற்றும் அசா.3 யை பார்த்து கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை.மேலும் அசா.1 முதல் அசா.3 வரையிலான எதிரி கொலை மிரட்டல் விடுத்ததால் தங்களுக்கு மரணம் பயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை.எனவே எதிரிக்கு எதிராக நீதிமன்றத்தால் வனையப்பட்ட இதச பிரிவு 506(1)ன் கீழான குற்றசாட்டு நிரூபனம் செய்யப்படவில்லை என்று நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

5-வது **<u>குற்றச்சாட்டுக்கான தீர்வு</u>**

மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரி வாதியை பெண் அரசு ஊழியர் என்று பாராமல் பெண்மைக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் திறந்த நீதிமன்றத்தில் பலபேர் பார்க்க உன்னை



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 19:57:47 +0530

பார்த்தால் முத்தம் கொடுக்கனும் போல் இருக்கு அறுவறுக்கத்தக்க வகையில் நடந்து கொண்டதாக பிரிவு 4 of TNPHW Act ன் கீழான குற்றச்சாட்டை பரிசீனை செய்கையில்,

**அசா.**1 செந்தில் சுசிலா தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் எதிரியான வடிவேல் என்பவரை தனக்கு தெரியும் என்றும், கடந்த 22.04.2024 ம் தேதியன்று மாலை 04.30 மணியளவில் தான் மன்னார்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1ல் பெஞ்ச் கிளார்க்காக திறந்தவெளி நீதிமன்றத்தில் பணியாற்றி கொண்டிருந்தபோது எதிரி வடிவேல் நீதிமன்றத்திற்குள் வந்து அலுவலக உதவியாளர் விஜயலெட்சுமி மற்றும் நகல் எடுப்பவர் உ. ரூத்மேகி ஆகியோரிடமும் காசு கொடு காசு கொடு என்று கேட்டார் என்றும், தான் அவரிடம் காசுயெல்லாம் வெளியே போங்க என்று கூறினேன் என்றும், அப்போது எதிரி தன்னை பார்த்து உன்னை பார்த்தால் முத்தம் கொடுக்கனும்போல் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு தனது அருகில் வந்தார் என்றும், மேலும், அசிங்கமாக திட்டினார் என்றும், இதுபோன்று அடிக்கடி வார இறுதி நாட்களில் நீதிமன்ற ஊழியர்கள் turn duty செய்யும் போது இதுபோன்று தகராறு செய்திருக்கிறார் என்றும், தான் உடனடியாக போலீசாருக்கு போன் செய்ய போகிறேன் என்று எனது தொலைபேசியை எடுத்தவுடன் இங்கிருந்து சென்றுவிட்டார் என்றும், சம்பவம் தொடர்பாக அன்றைய தினமே மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் மாண்பமை நீதித்துறை நடுவர் எண்.1(முகூபொ) மூலம் உரிய வழி மூலமாக புகார் மனு அளித்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

அசா.2 விஜயலட்சுமி எதிரி நீதிமன்றத்திற்குள் வந்து அசா.1 யை பார்த்து உன்னை பார்த்தால் முத்தம் கொடுக்கனும் போல் இருக்கிறது என்று சொல்லி கொண்டு அசா.1 ன் அருகில் வந்தார் என்று சாட்சியமளித்துள்ளார்.

அசா.3 ரூத்மேகியும் மேற்படி சங்கதியை அனுசரித்து சாட்சியமளித்துள்ளார்.

"தொந்தரவு"(Harassment) என்பது, ஒரு ஆணால் செய்யப்படும் எந்தவொரு அநாகரிகமான நடத்தை அல்லது செயலாகும்; அது அச்சுறுத்தல், பயம், அவமானம் அல்லது தர்மசங்கடத்தை



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 19:57:54 +0530

ஏற்படுத்துவதாகவோ அல்லது ஏற்படுத்த வாய்ப்புள்ளதாகவோ இருக்கலாம். இதில், நிந்திப்பது, காயம் ஏற்படுத்துவது, தொல்லை கொடுப்பது, தாக்குதல் நடத்துவது அல்லது பலவந்தத்தைப் பயன்படுத்துவது ஆகியவை அடங்கும்.

அசா.1 முதல் அசா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்கள் நம்பும்படியாகவும்,இயற்கையாகவும் ஏற்று கொள்ளும் படியாகவும் உள்ளது என்றும் இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.எதிரி கடந்த 22.04.2024 ம் தேதி 16.30 மணிக்கு அசா.1 மன்னார்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் திறந்த நீதிமன்றத்தில் அசா.1 அவரது சீட்டில் பணிபுரிந்து கொண்டு இருந்த போது எதிரி நீதிமன்றத்திற்குள் வந்து அசா.1 யை பார்த்து உன்னை பார்த்தால் முத்தம் கொடுக்கனும் போல் இருக்கிறது என்று சொல்லி கொண்டு அசா.1 ன் அருகில் சென்று அசா.1 யை தொந்தரவு செய்து அவரது பெண்மையை இழிவு படுத்தியுள்ளார் என்று நீதிமன்றம் தீர்மானிக்கிறது.எதிரியின் செயலானது பிரிவு 4 of TNPHW Act ன் கீழ் குற்றம் என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

27. இறுதியாக இவ்வழக்கில் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி),353,506(1) ன் கீழ் மேற்படி எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என தீர்மானிக்கப்பட்டு, பிரிவு **271(1) BNSS** ன் கீழ் எதிரியை இந்நீதிமன்றம் விடுதலை செய்தும், அரசுத்தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் இதச பிரிவு 452,பிரிவு 4 of TNPHW Act ன் கீழ் குற்றவாளி என நியாயமான சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என பிரிவு **271(2) BNSS ன் கீழ்** தீர்மானிக்கப்படுகிறது.

28. இவ்வழக்கின் எதிரி வடிவேல் என்பவருக்கு பிரிவு 4 Probation Offenders Act ன் கீழ் எவ்வித பலன்களும் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

29. எதிரி வடிவேலுக்கு அளிக்க இருக்கும் தண்டனைக் குறித்து எதிரியிடம் பிரிவு 271(2)ன் BNSS ன் கீழ் வினவியபோது,

எதிரி வடிவேல் " **நான் குற்றவாளி இல்லை என்றும்,கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், நான் கடந்த 2011 ம் ஆண்டு முதல் இந்த வழக்கிற்காக அலைத்து வருவதாகவும்,**



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 19:58:02 +0530

**என்னுடைய வருமானத்தை நம்பித்தான் எனது குடும்பம் உள்ளது என்றும், குறைந்தபட்ச தண்டனை வழங்கவேண்டும் என்றும் கூறினார்**"என்று கேட்டுக்கொண்டார்.

31. இந்த குற்றச்சம்பவம் நடைபெற்ற விதம், இந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்ட நபர்களின் நிலை, குற்றச்சம்பவத்தின் தீவிர தன்மை மற்றும் வழக்கின் சூழ்நிலை மற்றும் வழக்கு நடந்த காலஅளவு ஆகிய அனைத்தையும் பரிசீலனை செய்கையில் எதிரி வடிவேலுக்கு இதச பிரிவு 452 ன் படியான குற்றத்திற்கு 60 நாட்கள்(2 மாதம்) சிறை தண்டனையும் மற்றும் **ரூ.5,00/-(ரூபாய் ஐந்நூறு)** அபராதம் விதித்தும் கட்டத்தவறினால் **ஒரு வாரம்** மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும்,பிரிவு 4 of TNPHW Act ன் படியான குற்றத்திற்கு 180 நாட்கள்(6 மாதம்) சிறை தண்டனையும் மற்றும் **ரூ.10,000/-(ரூபாய் பத்தாயிரம்)** அபராதம் விதித்தும் கட்டத்தவறினால் **2 மாதம்** மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.மேற்படி சிறை தண்டனைகளை எதிரி ஏககாலத்தில் அனுப்பவிக்க உத்தரவிடப்படுகிறது.

எதிரி ஏற்கனவே விசாரணை காலத்தில் சிறையிலிருந்த 250 நாட்கள் (30.04.2024 முதல் 04.01.2025 (250 நாட்கள்) விதிக்கப்பட்ட தண்டனைக்கும்(180 நாட்கள்) மற்றும் அபாரதம் செலுத்ததற்கான தண்டனைக்கும் (7 நாட்கள்+60 நாட்கள்) கழித்துக்கொள்ளவும் பிரிவு 468 BNSS ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி ஏற்கனவே 250 நாட்கள் சிறையில் இருந்துவிட்டப்படியால் அவர் நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்படவில்லை.

32. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகவே, அது குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

33. எதிரி எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் தானாக ரத்தாக வேண்டியது.



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.05.07 19:58:09 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆம் -நாள் என்னால் திறந்த இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 19:58:15 +0530

நீதித்துறை நடுவர் எண்: 1

மன்னார்குடி.

**1.<u>எதிரி தரப்பு சாட்சிகள்</u>:**

| சாட்சியின் வரிசை எண். | *சாட்சியின் பெயர்* |
|---|---|
| அசா.1 | செந்தில் சுசிலா |
| அசா.2 | விஜயலெட்சுமி |
| அசா.3 | ரூத்மேகி |
| அசா.4 | மனோ சித்ரா-அலுவலக உதவியாளர் சார்பு நீதிமன்றம்,திருவாரூர் |
| அசா.5 | முருகன் - காவல் உதவி ஆய்வாளர்.<br>(வலங்கைமான் காவல் நிலையம் ) |

**2.<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u>:**

| சான்றாவணங்களின் | சான்றாவணம் குறிப்பு | சான்றளிக்கப்பட்ட/ ஒப்பமிட்டவரின் |
|---|---|---|



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 19:58:21 +0530

| வரிசை எண். | | விவரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் | (அ.சா.1 மூலம்) |
| அ.சா.ஆ.2 | பார்வை மகசர் | (அ.சா.2,4 மூலம்) |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | (அ.சா.5 மூலம்) |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைப்படம் | (அ.சா.5 மூலம்) |

3. அரசு தரப்பு சான்று பொருள் : இல்லை.

4. எதிரி தரப்பு சாட்சிகள் , சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் : இல்லை.

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 19:58:30 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,

மன்னார்குடி.

**குறிப்பு**

1) வழக்கு விசாரணையின்போது எதிரி மன்னார்குடி காவல் நிலைய குற்ற எண். 52/2026 வழக்கில் நீதிமன்ற காவலில் இருந்தார்.

2) எந்த சாட்சிகளும் மூன்று முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.

3)வழக்கின் முடிவு எதிரிக்கும் காவல்துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

**நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது**

மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள்,

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 19:58:36 +0530

**<u>நகல்</u>**

சிறை கண்காணிப்பாளர்

மாவட்ட சிறை புதுக்கோட்டை

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 19:58:42 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 19:58:49 +0530

**சி.சி.எண்.67/2025 நாள் 05.05.2026**

**எதிரிகள் ஆஜர்.**

**தீர்ப்புரை பகரப்பட்டது.**

இறுதியாக, இவ்வழக்கின் எதிரி மீதான இதச பிரிவுகள் 452, 294(b),353,506(1)IPC & 4 of TNPWH Act ன் கீழும், குற்றவாளிகள் அல்ல என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு, பிரிவு 271(1) BNSS ன் கீழ் எதிரிகளை இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கின்றது.

இவ்வழக்கில் வழக்குச்சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

எதிரி எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு தானாக ரத்தாக வேண்டியது.

நீதித்துறை நடுவர் எண்.1,

| |
|---|
| மன்னார்குடி. |